S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1978
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE ஞாயிறு ஜனவரி 04 * 2025 * மலர் -1 * இதழ்-217* VOL-1 * ISSUE-217 விலை ரூ.3 * பக்கம் -4

# அரசு ஊழியர்களுக்கு புது வகை ஓய்வூதியம்!

## ★பணியின்போது இறந்தால் ரூ. 25 லட்சம் வரை பணிக்கொடை; ★ முதலமைச்சர் ஸ்டாலின் அறிவிப்பு!!

சென்னை,ஜன.4

பழைய ஓய்வூதிய திட்டம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கங்களின் கூட்டமைப்பான ஜாக்டோ ஜியோ, போட்டா ஜியோ ஆகிய அமைப்புகள் போராடி வருகின்றன. வருகிற 6ந்தேதியில் இருந்து காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்கப்போவதாக ஏற்கனவே அறிவித்துள்ளன.

இந்த கூட்டமைப்புகளை அழைத்து கடந்த டிசம்பர் 22ந் தேதி அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகிய அமைச்சர்கள் குழு நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படவில்லை. எனவே திட்டமிட்டபடி காலவரையறையற்ற வேலைநிறுத்த போராட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் என்று அந்த கூட்டமைப்புகள் தெரிவித்தன.

அதன்படி, நேற்று காலை தலைமைச் செயலகத்தில் அமைச்சர் எ.வ.வேலு அலுவலகத்தில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் அமைச்சர் எ.வ.வேலுவுடன், அமைச்சர் தங்கம் தென்னரசும் கலந்து கொண்டார்.

ஜாக்டோ ஜியோ, போட்டா ஜியோ உள்ளிட்ட அனைத்து கூட்டமைப்புகளையும் தனித்தனியாக அழைத்து அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தைக்குப் பிறகு கூட்டமைப்புகளின் தலைமை நிர்வாகிகள் கூறுகையில்,

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று ஓய்வூதியம் குறித்த நல்ல புதிய அறிவிப்பை வெளியிட இருப்பதாக அமைச்சர்கள் தெரிவித்தனர். அது என்னவிதமான ஓய்வூதியம் ? என்பதை முதலமைச்சர்தான் தெரிவிப்பார். அதன் பிறகு அதனால் கிடைக்கும் பயன்கள் பற்றி ஆலோசித்து முடிவு செய்துவிட்டு, பின்னர் எங்களின் அறிவிப்புகளை வெளியிடுவோம் என்று தெரிவித்து இருந்தனர்.

இந்நிலையில், அமைச்சர்கள், உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பழைய ஓய்வூதிய திட்டத்தை அறிவித்தார்.

★ அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் அமல்படுத்தப்படும்.
★ கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் அளிக்கப்படும்.
★ 50 சதவீதத்தில் 10 சதவீதம் ஊழியர்களின் பங்களிப்பாக இருக்கும்.
★ பழைய ஓய்வூதிய பலன் வழங்கும் புதிய திட்டமான தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் செயல்படுத்தப்படும்.
★ அரசு ஊழியர்களுக்கு இணையாக அகவிலைப்படி உயர்வும் அளிக்கப்படும்.
★ *Tamil Nadu Assured Pension Scheme TAPS* செயல்படுத்தப்படும்.
★ ஓய்வூதியதாரர் இறந்தால் அவர் பெற்ற ஓய்வூதியத்தில் 60% குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.
★ 50% உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு 6 மாதத்திற்கு ஒருமுறை அகவிலைப்படி உயர்வு தரப்படும்.
★ பணிக்காலத்தை நிறைவு செய்யாமல் ஓய்வு பெற்றாலும் குறைந்தபட்ச ஓய்வூதியம் அளிக்கப்படும்.
★ ஓய்வு பெறும்போதும் பணிக்காலத்தில் இறக்க நேரிடும் போதும் பணிக்காலத்திற்கேற்ப ரூ.25 லட்சம் பணிக்கொடை வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.




இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 108 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11 திருக்கோயில்களில் 18 புதிய திட்டப் பணிகள் மற்றும் ஒரு பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டடம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, ரூ.15 கோடியே 30 இலட்சம் செலவில் 7 திருக்கோயில்களில் 10 முடிவுற்ற திருப்பணிகள் மற்றும் 6 சரசு ஆய்வாளர் அலுவலகங்களை திறந்து வைத்து, சிற்றுந்துகளின் பயன்பாட்டினை காணொலிக் காட்சி வாயிலாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை சாலை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், வேளாண் விளை பொருட்கள் விற்பனை மையக் கட்டிடத்தினை அமைச்சர் சு. முத்துசாமி திறந்து வைத்து மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு கடனுதவிகளை வழங்கினார். அருகில்கலெக்டர்கந்தசாமி,வி.சி.சந்திரகுமார்,கூட்டுறவுசங்கங்களின்இணைப்பதிவாளர் கந்தராஜா உள்பட பலர் உள்ளனர்.

### மாரண்டஅள்ளி அருகே

## 20 பவுன் நகை கொள்ளையில் பெண் உட்பட 2 பேர் கைது!



பாலக்கோடு.ஜன.4

தர்மபுரிமாவட்டம் மாரண்டஅள்ளி அடுத்தநல்லாம்பட்டி கிராமத்தை சேர்ந்த கூலி தொழிலாளி முனிராஜூ, இவரது மனைவி வெண்ணிலா. கடந்த மாதம் 27ம் தேதி வீட்டை பூட்டி விட்டு கூலி வேலைக்கு சென்றார். வேலை முடிந்து மதியம் வீட்டிற்க்கு வந்து பார்த்த போது மர்ம நபர்கள் வீட்டின் பூட்டை உடைத்து பீரோவில் வைத்திருந்த செயின், மோதிரம் உள்ளிட்ட 20 பவுன் தங்க நகைகளை கொள்ளையடித்து சென்றது தெரிய வந்தது, இது குறித்து மாரண்டஅள்ளி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் இன்ஸ்பெக்டர் தீபா தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு குற்றவாளிகளை தேடி வந்தனர்,

இந்நிலையில் மாரண்டஅள்ளி அடுத்த தொட்டபடகாண்டஅள்ளியை சேர்ந்த லாரி டிரைவர் ரமேஷ் (34) மீது சந்தேகமடைந்த போலீசார் அவரை பிடித்து விசாரித்ததில் திருடியதை ஒப்புக் கொண்டார்.

மேலும் அவர் தெரிவித்த வாக்குமூலத்தில் சாமனூர் ஜீவாநகர் பகுதியை சேர்ந்த லாரி டிரைவர் சென்றாயன் மனைவி பூங்கொடி(34) மூலம் வெண்ணிலா வீட்டில் கொள்ளையடிக்க திட்டம் தீட்டினேன்.

அதன்படி சம்பவ நாளன்று பூங்கொடி வெண்ணிலா வேலைக்கு சென்ற தகவலை பூங்கொடி கூறினார். அதனை தொடர்ந்து வெண்ணிலாவின் வீட்டில் புகுந்து 20 பவுன் நகைகளை திருடியதாக தெரிவித்தார். இதனைதொடர்ந்து ரமேஷ் மற்றும் பூங்கொடியை போலீசார் கைது செய்து தர்மபுரி சிறையில் அடைத்தனர்.

மேலும் அவர்கள் திருடிய மொத்த நகைகளும் பறிமுதல் செய்யப்பட்டது.

### கள்ளக்குறிச்சி அருகே

## தலையை துண்டித்து மருமகள் கொலை!

### மாமியார் வெறிச்செயல்!!

கள்ளக்குறிச்சி,ஜன.04–



கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே உள்ளவிரியூர் கிராமத்தைச் சேர்ந்தவர் மரியாரோசாரியோ. இவரது தனது மனைவி நந்தினி. கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு தன்னுடைய தாய் கிரிஸ்தோப்மேரி கிறிஸ்தவ முறைப்படி சில சடங்குகள் செய்வதற்காக நந்தினியை அழைத்துச் சென்றதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் இரண்டு தினங்களாகியும் தனது மனைவி நந்தினி மற்றும் தாய் கிறிஸ்தோப்மேரி வீடு திரும்பாததால் மரியரொசாரியோ தனது மனைவி நந்தினி செல்போன் எண்ணுக்கு தொடர்பு கொண்ட போது செல்போன் ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டு இருந்தது.

இதனால் சந்தேகம் அடைந்த மரியா ரோசாரியோ சங்கராபுரம் காவல் நிலையத்தில் தனது மனைவியை காணவில்லை என புகார் அளித்தார். புகாரைப் பெற்ற காவல்துறையினர் முதற்கட்டமாக மருமகளை அழைத்துச் சென்ற மாமியார் கிறிஸ்தோப்மேரி இருக்கும் இடத்தை கண்டுபிடித்து அவரை காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணையை தொடங்கினர். போலீசார் விசாரணையில் பல திடுக்கிடும் தகவல் வெளியாகின. குறிப்பாக சோழம்பட்டு கிராமம் அழகாபுரம் செல்லும் சாலையில் மணிமுக்தா ஆற்றின் கரையோரம் மருமகளின் தலையைத் துண்டித்து கொலை செய்து ஆற்றங்கரையோரம் வெவ்வேறு இடங்களில் புதைத்து விட்டது தெரியவந்தது. அதன்பேரில் போலீசார் வழக்குபதிவு செய்து கிரிஸ்தோப்மேரியை கைது செய்தனர்.



நாமக்கல் மாவட்ட கலெக்டர் துர்காமூர்த்தி, குமாரபாளையம் வட்டம், சமயசங்கிலி அக்ரஹாரம் பகுதியில் கூட்டுறவுத்துறையின் மூலம் கரும்பு கொள்முதல் செய்தல் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.



நெல்லை மாவட்டம் நாங்குநேரி மேற்கு ஒன்றிய திமுக சார்பில் 2026 ஆம் ஆண்டு பொங்கல்திருநாளைமுன்னிட்டுதளபதிசமுத்திரத்தில்மாபெரும்கிரிக்கெட்தொடருக்கான போட்டி தொடங்கப்பட்டது. இந்த போட்டியினை நெல்லை கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் கிரகாம்பெல் தொடங்கி வைத்தார். நிகழ்வில் அவருடன் நாங்குநேரி மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் சுடலைகண்ணு, ராதாபுரம் மேற்கு ஒன்றிய திமுகசெயலாளர் ஜோசப் பெல்சி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

### அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில்

## மது விருந்துடன் புத்தாண்டு கொண்டாடிய 4 டாக்டர்கள், மருந்தாளுநர் சஸ்பெண்ட்!

### சிவகங்கை அதிகாரி நடவடிக்கை!!

காரைக்குடி, ஜன.04–

சிவகங்கை மாவட்டம், கல்லல் அருகே அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மது விருந்துடன் புத்தாண்டு கொண்டாடிய 4 டாக்டர்கள், மருந்தாளுநரை சஸ்பெண்ட் செய்து சிவகங்கை மருத்துவத்துறை அதிகாரி உத்தரவிட்டுள்ளார். காரைக்குடி கல்லல் அருகே செம்பனூர் பகுதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

கல்லல் மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ள 50 க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இங்கு சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர் .

இந்நிலையில் புத்தாண்டு நள்ளிரவு நடந்த விபத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக வந்த ஒருவர் அவசர சிகிச்சை பகுதிக்கு சென்று பார்த்த போது மருத்துவர் இல்லை என்றதும் உள்ளே மருத்துவர் அறையில் மருத்துவர் உள்ளாரா ? என பார்க்கச் சென்றுள்ளார். அப்போது மருத்துவர் அறையில் வெளிநாட்டு உயர்தர மதுபாட்டில் அருகில் சைடீஸ் நொறுக்கு தீனியுடன் இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்து அதனை வீடியோ எடுத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டார். அது வைரல் ஆனது. இதுகுறித்து 31 ஆம் தேதி இரவு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியில் இருந்த டாக்டர் சசிக்குமார் என்பவரிடம் கேட்ட பொழுது, ''தனக்கு குடிப்பழக்கம் இல்லை என்றும் வெளிநபர்கள் யாராவது வந்து உள்ளே மது அருந்தி இருக்கலாம்'' என்று அலட்சியமாக பதில் கூறினார். சம்பவம் குறித்து மாவட்ட நிர்வாகம் முழுமையான விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் சுகாதாரத்துறை தலைமை மருத்துவர் மீனாட்சி முதல் கட்ட விசாரணை தொட ர்ந்து அங்கு பணிபுரியும் நான்கு மருத்துவர்கள் மற்றும் மருந்தாளுநர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் மற்றும் விளக்கம் கேட்டு நோட்டீசும் அனுப்பப்பட்டுள்ளது.



தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், புலிக்கரை, ஜாகீர் வரகூரில் கூட்டுறவுத்துறையின் சார்பில் 7 புதிய பகுதி நேர , முழுநேர நியாயவிலைக்கடைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் , தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி முன்னிலையில் திறந்து வைத்தார்கள். உடன் பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே. மணி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் கு.த.சரவணன், பொது விநியோகத் திட்டம் துணைப் பதிவாளர் ப.சுந்தரம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



# சேலத்தில் இன்ஜினியர்ஸ் பில்ட் எக்ஸ்போ கட்டுமான பொருட்கள் கண்காட்சி!

## அமைச்சர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!!

சேலம், ஜன.4

சேலம் ஐந்து ரோட்டில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், இன்ஜினியர்ஸ் பில்ட் எக்ஸ்போ கட்டுமான பொருட்கள் கண்காட்சி, இந்த கண்காட்சியினை சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் துவக்கி வைத்தார். மேலும் சேலம் மேயர் ராமச்சந்திரன் எக்ஸ்போ குறித்த டைரக்டரியை வெளியிட, சேலம் சிவில் இன்ஜினியர்ஸ் அசோசியேசன் கூட்டமைப்பு மாநில தலைவர் ராமராவ் பெற்றுக் கொண்டார். இந்த கண்காட்சியில் கட்டுமான துறை சம்பந்தமான 150 க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டு, கட்டுமானத்திற்கு தேவையான அதிநவீன கட்டுமான பொருட்கள் மற்றும் கதவு, ஜன்னல், ரெடி மிக்ஸ் கான்கிரீட், செரா மிக்ஸ், மர சாமான்கள், சோலார் மின்சாதனங்கள், போன்றவை குறித்து இலவச பார்வை அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது என்றும், பொதுமக்கள் இந்த இலவச அரங்குகளை பார்வையிட்டு தங்களுக்கு தேவையான கட்டுமான பொருட்களை தரமானதாகவும், விலை குறைந்த வகையிலும் வாங்கி பயன்பெறுமாறு, சேலம் சிவில் இன்ஜினியர் அசோசியேசன் தலைவர் செல்வகுமார், எஞ்சினியர்ஸ் பில்ட் எக்ஸ்போ சேர்மன் ராஜு, நாகராஜ், எக்ஸ்போ பொருளாளர் செந்தில் வேலவன், ஒருங்கிணைப்பாளர் செல்வமணி, ஆகியோர் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.



## தண்டலம் ஊராட்சியில்

# இலவச வீட்டுமனை பட்டா வழங்க கோரி திருப்போரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பொதுமக்கள் மனு!

செங்கல்பட்டு, ஜன. 4

செங்கல்பட்டு, மாவட்டம் திருப்போரூர் வட்டம் நெ.56 தண்டலம் ஊராட்சி (பாரதி நகர்) மேட்டுத்தண்டலம் எம்.ஜி.ஆர் தெரு ஏரிக்கரை தெரு, ஏரிக்கரை முதல் குறுக்கு தெரு, ஏரிக்கரை இரண்டாவது குறுக்கு தெரு, ஏரிக்கரை மூன்றாவது குறுக்கு தெருக்களில் சுமார் 55 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து வருகிறார்கள். குடும்ப அட்டை, ஆதார் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, வீட்டு வரி, குடிநீர் வரி, மின் இணைப்பு ஆகியவை பெற்றுள்ளதோடு மேற்கண்ட புல எண் 3ல் ஒரு சிலருக்கு தமிழக அரசு வழங்கிய இலவச வீட்டு மனை பட்டாவையும் பெற்றுள்ளார்கள்.அது மட்டுமல்லாமல் இங்கு வசிக்கக் கூடியவர்கள் அனைவரும் கூலித்தொழில், சிறு தொழில் செய்து அன்றாடம் பிழைப்பு நடத்தி வருபவர்கள், கடன் உடன் பெற்று சிறு வீடுகள் கட்டி வாழ்ந்து வருகின்றனர். தற்போது இவர்களுக்கு வேறு இடத்தில் சொந்தமான பட்டாவோ நிலமோ கிடையாது, தற்போது திருப்போரூர் வட்டாட்சியர் மூலம் ஆணை 7.பிரிவின் கீழ் அறிவிப்பு வழங்கியது கண்டு அப்பகுதி மக்கள் அதிர்ச்சியும், மன உளைச்சலையும் அடைந்துள்ளார்கள். எனவே இவர்களின் வாழ்வாதாரம் மற்றும் குடும்ப சூழல் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் இந்த அறிவிப்பை திரும்ப பெரும்படி தண்டலம் ஊராட்சி மன்றம் பொதுமக்கள் சார்பில் திருப்போரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.



கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் நூலகம் அருகே தேமுதிக நிறுவனர் விஜயகாந்த் ன் 2'ம் ஆண்டு குருபூஜை முன்னிட்டு நெல்லிக்குப்பம் நகர தேமுதிக சார்பில் கவுன்சிலர் நகர கழகசெயலாளருமானகவிதாகஜேந்திரன்தலைமையேற்றுபொதுமக்களுக்குஅன்னதானம் வழங்கினார். நிகழ்ச்சியில் குரு பூஜையில் திமுக நகர இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜா. தேமுதிக நிர்வாகிகள் நகர அவைதலைவர் ஆறுமுகம். நகர பொருளாளர் நாகராஜன். நகர துணை செயலாளர்கள் கோவலன். சசிகலாஅருள். மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் காபிர்வேல்உள்ளிட்டோர் ஏராளமான கலந்து கொண்டனர்.

# வெற்றி வாக்குச்சாவடி சிறப்பு ஆலோசனைக் கூட்டம்!

## க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!!

காஞ்சிபுரம், ஜன.4

உத்திரமேரூர் ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு உறுப்பினர் .கெ.ஞான சேகரன் கலந்துகொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் மற்றும் தேர்தல் தொடர்பான ஆலோசனைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், பேரூராட்சி செயலாளர் பாரி வள்ளல் பேரூராட்சி மன்ற தலைவர் சசிகுமார் ஒன்றிய துணை செயலாளர் தயாளன் மாவட்ட பிரதிநிதி கோவிந்தராஜ் அவைத் தலைவர் சுப்பராயன் கம்மாள பூண்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்மோகன் நவகிரி ஜனார்த்தனன் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆதிநாராயணன் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சுந்தர் வாசு மாவட்ட,ஒன்றிய கழக நிர்வாகிகள்,மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி பாகஎண்: கிளை கழக நிர்வாகிகள்,BLA2,BDA,BLC,பொதுமக்கள்,கழக உடன்றப்புகள் திரளாக கலந்துகொண்டனர்.



திருவண்ணாமலையில் தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலுவை ஆங்கில வருட புத்தாண்டை முன்னிட்டு ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய திமுக செயலாளரும் மாவட்ட கவுன்சிலருமான கவிதா தண்டபாணி மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது உடன் திமுக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



# ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு 15 ஆயிரம் பேருக்கு சமுதாய நல்லிணக்க சம பந்தி விருந்து!

வாணியம்பாடி, ஜன. 4

ஒரேமேடையில் முன்னாள் முதல்வர்கள் அண்ணா, கருணாநிதி மற்றும் தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆகியோர் வேடங்கள் அணிந்து பொதுமக்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் திமுக சார்பில் மதனாஞ்சேரி கிராமத்தில் உள்ள தளபதி அறிவாலயத்தில் கடந்த 15 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் ஆங்கில புத்தாண்டு அன்று சமுதாய நல்லிணக்க சமபந்தி விருந்து நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டு ஆங்கில புத்தாண்டு தினமான இன்று வாணியம்பாடி, ஆம்பூர் தொகுதிகளை சார்ந்த திமுக உறுப்பினர்கள், தொண்டர்கள், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என 15 ஆயிரம் பேருக்கு ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வி. எஸ். ஞானவேலன் சார்பில் பிரியாணி தயார் செய்யப்பட்டு பிரியாணி ,லெக் பீஸ் என 15 வகையான அறுசுவை அசைவ விருந்து, வேட்டி மற்றும் புதிய ஆண்டிற்கான காலண்டர்கள் வழங்கினார். இதில் முன்னாள் முதலமைச்சர்கள் அண்ணா, கருணாநிதி, தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் ஆகியோரின் வேடமணிந்த கலைஞர்கள் திமுகவினருக்கும் பொது மக்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

மேலும் நையாண்டி, கரகாட்டம், ஒயிலாலாட்டம், பாட்டுக்கச்சேரி, உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

விழாவில் வாணியம்பாடி, ஆம்பூர் உள்ளிட்ட திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்த திமுக மாநில, மாவட்ட, ஒன்றியநிர்வாகிகள்உள்ளாட்சிபிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 15 க்கும் மேற்பட்டோர்கலந்துக்கொண்டு புத்தாண்டு வாழ்த்துகளை ஒருவருக்கொருவர் பரிமாறி கொண்டனர்.

புத்தாண்டு தினமான மதனாஞ்சேரி பகுதியில் உள்ள தளபதி அறிவாலயம் விழாக்கோலம் போன்று காட்சி அளித்தது.



# புத்தாண்டை முன்னிட்டு வழிவிடு முருகன் கோவிலில் சபரி யாத்திரை குழு 8-ம் ஆண்டு அன்னதானம்!

கூடலூர், ஜன. 4

தேனி மாவட்டம் கூடலூர் அருகே குமுளி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள வழி விடு முருகன் கோவிலில் சபரி யாத்திரை குழுவின் சார்பாக அன்னதானம் நடைபெற்றது சபரி யாத்திரை சின்னமனூர் குழுவானது புத்தாண்டை முன்னிட்டு வழி விடு முருகன் கோவிலுக்கு வரும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு எட்டாம் ஆண்டு தொடக்கமாக நேற்று புத்தாண்டை கொண்டாடும் விதமாக வரும் பக்தர்களுக்கு தக்காளி சாதம், புளி சாதம் ,தயிர் சாதம், பொங்கல் என பலவகையான உணவுகள் மற்றும் தண்ணீர் பாட்டில்கள் விநியோகம் செய்தனர். கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய வந்த பக்தர்கள் அனைவரும் அன்னதானத்தில் கலந்துகொண்டு உணவு அருந்தி சபரி யாத்திரை சின்னமனூர் குழு பக்தர்கள் அனைவரையும் வாழ்த்தி சென்றனர் நடைபெற்ற அன்னதான நிகழ்ச்சியில் சபரி யாத்திரை குழு நாகராஜ் அவர்கள் தலைமையில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.






ஆங்கில புத்தாண்டை ஒட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் மாநில மாணவரணி செயலாளர் ராஜீவ்காந்தி புத்தகம் வாங்கி வாழ்த்து பெற்றார்.

## பாலமேட்டில்

# 16-ந் தேதி ஜல்லிகட்டு விழா முன் ஏற்பாடுகள் தொடங்கின!



அலங்காநல்லூர், ஜன.4

மதுரை மாவட்டம் பாலமேட்டில் வருகிற 16ந் தேதி அங்குள்ள மஞ்சமலை ஆற்று திடலில் நடைபெற உள்ளது. இதையொட்டி வாடிவாசல் வர்ணம் பூசும் பணிகள் தொடங்கியுள்ளது. அதை தொடர்ந்து பார்வையாளர்கள்அமரும்மாடம்,பாதுகாப்புபணிக்காக பயன்படுத்தப்படும் தடுப்புகள், இதற்காக முன்னேற்பாடு பணிகள் தொடங்குவதற்கு வாகனம்மூலமாக இறக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து ஏற்பாடுகளையும், அரசு வழிகாட்டுதல் படி பாலமேடு கிராம பொது மகாலிங்கசுவாமி மடத்து கமிட்டி நிர்வாகிகளும், மற்றும் மாவட்ட நிர்வாக உத்தரவின்பேரில்பேரூராட்சிநிர்வாகத்தினரும்,மற்றும் குழுவினர்களும்,பணியாளர்களும்செய்துவருகின்றனர்.

# சிறுமி பாலியல் பலாத்காரம்!

## தொழிலாளி போக்சோவில் கைது!!

கோபி ஜன4—

கோபி அடுத் துள்ள நம்பியூரை சேர்ந்தவர் மரு தாச்சலம் (40). தச் சுத்தொழி லாளி யான இவர் கோபி பகுதியை சேர்ந்த பிளஸ் 1 பயி லும்16 வயது சிறு மியை மிரட்டி பாலி யல் வன்கொடுமை செய்து உள்ளார்.



இதில் அந்த சிறுமி கர்ப்பமடைந்த தால் அதிர்ச்சிய டைந்த சிறுமியின் தாயார் கோபி மக ளிர் போலீசில் புகார் அளித் தார். போலீசார் போக்சோ சட்டத் தின் வழக்கு பதிவு செய்து விசா ரணை யில் மருதாச்சலம் சிறுமியை மிரட்டி பலாத்காரம் செய்தது தெரிய வந்தது. இதையடுத்து மரு தாச்சலத்தை. போலீசார் கைது சிறையில் அடைந்தனர்.



# கல்லூரி மாணவிகள் வாழை மரங்களுக்கு முட்டுக் கொடுத்தல் பற்றி விவசாயிகளுக்கு விளக்கம்!

கம்பம், ஜன. 4

தேனி மாவட்டம் கம்பத்தில் கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி மாணவிகள் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு வாழை மரங்கள் பராமரிப்பது மற்றும் முட்டுக்கொடுத்தல் சம்பந்தமாக விளக்கம் அளித்தனர். அதேபோல் வாழை மரங்கள் பலன் தரும் நேரங்களில் வாழைத்தார்கள் அதிக எடையுடன் இருப்பதினால் வாழை மரம் ஒடிந்து சேதம் ஆவதால் விவசாயிகளுக்கு பெரிதும் பாதிப்பு ஏற்படுகிறது என்பதையும் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர். நடைபெற்ற புகைப்பட விளக்கத்தில் வேளாண் கல்லூரி மாணவிகள் தமயந்தி, சுருதிகா, ஸ்ரீநிதி,

பிர் நாஸ் பர்வீன், அன்பு மொழி, மதுரஞ்சனா, ஷர்மிளா, ஆகியோர் கலந்து கொண்டனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



கோயம்புத்தூர் மாவட்டத்தின் வாக்கு எண்ணிக்கை மையமாக செயல்படும் அரசின் பொறியியல் கல்லூரியில் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் பவன்குமார் க.கிரியப்பனவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் , காவல் துணை ஆணையர் கோ. கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) மகேஸ்வரி மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உள்ளனர்.



சேலம், ஜாகிர் அம்மாபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை சுற்றுலாத் துறை அமைச்சர்இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டா ர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர்ஆ .இராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர்மா.இளங்கோவன், துணை மேயர் மா.சாரதா தேவி, மாவட்ட சுகாதார அலுவலர் (சேலம்) சௌண்டம்மாள் ஆகியோர் உள்ளனர்.



இராணிப்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தில் விடுபட்ட நோட்டீஸ் பெற்றவர்களிடம் விசாரணை நடந்து வருவதை ராணிப்பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான சந்திரகலா ஆய்வு செய்து விபரங்களை கேட்டறிந்த்தார். கோட்டாட்சியர் ராஜி, நகராட்சி ஆணையாளர் (பொ) பாலமுருகன் உட்பட பலர் இருந்தனர்.



சேலம் அருள்மிகு கோட்டை ஸ்ரீ பெரிய மாரியம்மன் திருக்கோவிலில், மார்கழி மாத பௌர்ணமியை முன்னிட்டு, 108 பெண்கள் கலந்து கொண்ட, மகாலட்சுமி திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இந்த பூஜையில் விநாயகர், முருகன், மகாலட்சுமி,உள்ளிட்ட சுவாமிகளின் திருமந்திரங்கள் ஓதப்பட்டது. இதில் ஒவ்வொரு குடும்பத்திலும், துன்பங்கள் நீங்கி மகிழ்ச்சி பொங்கிட, வாழ்வில் நோயற்ற வாழ்வு வாழ, பெண்கள் பிரார்த்தனை செய்து பூஜையில் கலந்து கொண்டனர்.

### மண் சரிவு காரணமாக

# மேட்டுப்பாளையம்-ஊட்டி மலை ரெயில் சேவை இன்று ரத்து!

மேட்டுப்பாளையம்,ஜன.4

உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளநூற்றாண்டுபழமைவாய்ந்த நீலகிரி மலை ரயில் மேட்டுப்பாளையம் ரயில்நிலையத்தில் இருந்து உதகைக்கு தினசரி காலை 7.10 மணிக்கு இயக்கப்பட்டு வருகிறது.

மேலும் தற்போது விடுமுறை கால சிறப்பு மலைரயிலும் காலை 9.10 மணிக்கு இயக்கப்பட்டு வருகிறது.

உள்நாடு மட்டுமின்றி வெளிநாட்டு சுற்றுலாபயணிகளையும் ஈர்க்கும் இம்மலை ரயில் செல்லும் இருப்பு பாதையில் நேற்றிரவு பெய்த மழை காரணமாக ஏற்பட்ட மண் சரிவுகளால் போக்குவரத்து ரத்து செய்யப்படுவதாக ரயில்வே நிர்வாகம் அறிவித்ததுள்ளது.

மலை ரயில் கடந்து செல்லும் அடர்லி மற்றும் ஹில்குரோவ் ரயில் நிலையங்களுக்கு இடையே பல்சக்கர தண்டவாள பாதையின் மீது இரண்டு இடங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டு தண்டவாளத்தின் மீது மண் சகதியும் பாறைகளும் விழுந்து கிடப்பதால் காலை மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்ட மலைரயில் கல்லார் ரயில் நிலை யத்தில் நிறுத்தப்பட்டு பின்னர் மீண்டும் மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்திற்கே திரும்பி யது.இதனிடையே கல்லார் ரயில் நிலையத்தில் இருந்து மலைரயில் மேட்டுப்பாளையம் ரயில் நிலையம் திரு ம்பு வதால் மேட்டுப்பாளையம்நகரில்உள்ளகாட்டூர்ரயில்வே கேட் மூட ப்பட்டது.ஆனால் ரயில் வர தாமதமானதால் சாலையின் இருபுறமும் வாகனங்கள் வரிசை கட்டி நின்றன.

ரயில் திரும்பி வருவதில் சரியான உத்திரவுகள் இல்லாமல் ஒரு மணி நேரத்திற்கு மேலாக ரயில்வே கேட் மூடப்ப ட்டதால் கோபமடைந்த வாகன ஓட்டிகள் அந்த இடத்திலேயே சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதன்பின்னர் மலைரயில் கடந்து சென்றதால் கேட் திறக்கப்பட்டு காட்டூர் பகுதியில் போக்குவரத்து சீரானது.மலைரயில் பாதையில் ஏற்பட்டுள்ள மண்சரிவுகள் அகற்றும் சீரமைப்பு பணிகள் நிறைவடைந்தவுடன் நீலகிரி மலைரயில் சேவை துவங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனிதநேய சேவை நிகழ்ச்சி!



கோவை, ஜன.4–

ஜீவஜோதி இரத்த தான அறக்கட்டளை, தொப்பம்பட்டி அப்துல்கலாம் நற்பணி மன்றம், ஹேப்பி சில்ட்ரன்ஸ் குரோத் கம்யூனிட்டி ஆகிய அமைப்புகள் இணைந்து, கோவை கணபதி மோர் மார்கெட் பகுதியில் ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு மனிதநேய சேவை நிகழ்ச்சியை நடத்தின.

இந்த நிகழ்ச்சியில், குழந்தைகள், முதியோ ர்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஜீவஜோதி இரத்த தான அறக்கட்டளை நிறுவனர் சங்கர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், அப்துல்கலாம் நற்பணி மன்ற நிர்வாகி பாலதண்டபாணி, டொனிக்ர்ஷ் ஆகியோர் முன்னிலையில் சுமார் 300 பேருக்கு உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜெஸ்கோ முஹம்மது, கவிதா சில்வர் ஜீவல்லர்ஸ் நிறுவனரான நரேஷ், ஆஸ்பயர் ஆண்டனி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு, சேவை மனப்பான்மையை பாராட்டினர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஜீவஜோதி இரத்த தான அறக்கட்டளை நிர்வாகிகள் ஜம்ரூத், ஷமிம் உள்ளிட்டோர் கவனித்தனர்.

# பொங்கல் பண்டிகையின்போது மது கடைகளுக்கு விடுமுறை!

### இந்து மக்கள் கட்சி வலியுறுத்தல்!!

கோவை,ஜன.4–

இந்து மக்கள் கட்சி மாநில பொறுப்பாளர் கே.சூர்யா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:—



தமிழர்களின் பாரம்பரிய திருநாளான பொங்கல் பண்டிகை விவசாயிகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், குடும்ப ஒற்றுமையை வலியுறுத்தும் விழாவாகவும் கொண்டாடப்படுகிறது. இத்தகைய புனிதமான நாட்களில் மது கடைகள் திறந்திருப்பது சமூக பண்பாட்டுக்கு எதிரானதாகும்.

பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் ஆகிய நாட்களில் மது விற்பனை நடைபெறுவதால் குடும்பங்களில் சண்டை, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு மனஅழுத்தம், சாலை விபத்துகள் மற்றும் சட்ட ஒழுங்கு பிரச்சினைகள் அதிகரிக்கும் நிலை உருவாகிறது.

எனவே, பொங்கல் பண்டிகை நாட்களில் அனைத்து டாஸ்மாக் மது கடைகளுக்கும் முழுமையான விடுமுறை அறிவித்து, பொங்கலை மது இல்லா பண்டிகையாக கொண்டாட தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது அரசியல் கோரிக்கை அல்ல; தமிழர் பண்பாடு, சமூக நலம் மற்றும் குடும்ப பாதுகாப்பை கருத்தில் கொண்டு முன்வைக்கப்படும் நியாயமான கோரிக்கையாகும்.

இவ்வாறு இந்து மக்கள் கட்சி மாநில பொறுப்பாளர் சூர்யா தெரிவித்துள்ளார்.

### கோவை அரசு மருத்துவமனையில்

# புத்தாண்டு தினத்தில் பிறந்த 4 குழந்தைகள்!

கோவை,ஜன.4

கோவை மாவட்டத்தில் ஆங்கில புத்தாண்டு தினம் வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது. ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டனர்.இந்த புத்தாண்டு பிறந்த நாளில் கோவை அரசு மருத்துவமனையில் நள்ளிரவு 12 மணி முதல் நான்கு குழந்தைகள் பிறந்தன,

இதில் மூன்று ஆண் குழந்தைகள் ஒருபெண் குழந்தை ஆவர், குழந்தைகள் நலமுடன் இருப்பதாக மருத்துவமனையின் டீன் கீதாஞ்சலி தெரிவித்தார்.

புத்தாண்டு தினத்தில் குழந்தைகள் பிறந்ததால் பெற்றோர் மகிழ்ச்சி அடைந்தனர்,

மேலும் கடந்த ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரைகோவைஅரசுமருத்துவமனையில்மொத்தம்5,865 குழந்தைகள் பிறந்தன,

இதில் 2,925 ஆண் குழந்தைகள், 2,940 பெண் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# நான்கரை சவரன் நகையை திருடிய காவலாளியை பிடித்த போலீசார்!

கொடைக்கானல், ஜன.4

கொடைக்கானல் செண்பகனூர் தைக்கால் பகுதியில் திறந்த வீட்டில் பீரோவை உடைத்து நகையை திருடிய திருடனை போலீசார் கைது செய்து நகையை மீட்டனர்.

செண்பகனூர் தைக்கால் பகுதியை சேர்ந்தவர் சரவணன் இவரது மனைவி வீட்டை பூட்டாமல் வெளியே சென்றார்.



இவர் வீட்டிற்கு திரும்பிய போது வீட்டின் உள்ளே உள்ள பீரோ உடைக்கப்பட்டு அவரது நான்கரை பவுன் நகைகள் காணாமல் போனது கண்டு அதிர்ச்சியடைந்தார்.

கொடைக்கானல் காவல் நிலையத்தில் சரவணன் புகார் அளித்ததின் பேரில் ஆய்வாளர் வசந்தகுமார் விசாரணை நடத்தினார்.

விசாரணையில் தனியார் விடுதியில் பணியாற்றிய செக்யூரிட்டியாக பணியாற்றிய மதுரையை சேர்ந்த விக்னேஷ்குமார் 33, என்பதும் இவர் விருதுநகர் மாவட்டம் சதுரகிரி பகுதியில் பதுங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

போலீசார் அவரிடமிருந்த நான்கரை சவரன் நகைகளை மீட்டனர். மேலும் இவர் மீது பல்வேறு திருட்டு வழக்குகள் காவல் நிலையத்தில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.



# ராணிப்பேட்டையில் மானிய விலையில் புல் நறுக்கும் இயந்திரங்கள்; அமைச்சர் காந்தி வழங்கினார்!

ராணிப்பேட்டை, ஜன.4

கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் ராணிப்பேட்டையில் 40 பயனாளிகளுக்கு மானிய விலையில் புல் நறுக்கும் இயந்திரங்களை அமைச்சர் காந்தி வழங்கினார்.

ராணிப்பேட்டை கால்நடை மருத்தகத்தில் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் அரசு மானியத்துடனான புல் நறுக்கும் இயந்திரங்களை பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

கலெக்டர் சந்திர கலா தலைமை தாங்கினார் .

எம் எல் ஏ ஈஸ்வரப்பன் முன்னிலை வகித்தார்.மண்டல இணை இயக்குநர் கால்நடைதுறை.பிரசன்னா, துணை இயக்குநர் வெங்கடேசன், உதவி இயக்குநர் திருநாவுக்கரசு, ஐவிபி எம் இயக்குனர் ரூத்சோபிலா அகியோர் வரவேற்றனர்.

சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட கைத்தறி மற்றும் துணி நூல் அமைச்சர் காந்தி ரூ.5.18 லட்சத்திற்கு தலா ரூ.25, ஆயிரத்து 936 ல் 50 சதமாக ரூ.12, ஆயிரத்து 948 அரசு மானியத்துடன் புல்நறுக்கும் இயந்திரங்களை பயனாளிகள் 40 பேருக்கு வழங்கினார்.

இயந்திரங்கள் மூலம் புல், சோளம், கரும்புச்சக்கை போன்றவற்றை சிறு துண்டுகளாக வெட்டி மாடு, ஆடு , கோழி உள்ளிட்ட கால்நடைகளுக்கு உணவாக அளிக்கும் பட்சத்தில் எளிதான ஜீரணம் ,வளர்ப்பவர்களுக்கு ,செலவு நேரமிச்சமாகிறது..

இந்நிகழ்ச்சியில் டவுன் சேர்மன் . சுஜாதா வினோத், துணை சேர்மன் ரமேஷ் கர்ணா,கால்நடைமருத்துவர்கள்தணிகைவேலு,சதிஷ்பாபு, லட்சுமணன்,செந்தில் வளவன், சுகன்யா, ஓம் சிவ பிரகாசம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# மனநலம் பாதிக்கப்பட்டவர் திடீரென தானே தீ வைத்துக் கொண்டு உயிரிழப்பு !

### சாலையோரம் பரபரப்பு; விசாரணையில் போலீசார்!!

தாராபுரம், ஜன.4

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தை அடுத்துள்ள குண்டடம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட காஞ்சிபுரம் பகுதியில், மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவர் திடீரென தானே தீ வைத்துக் கொண்டு உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சுமார் 55 வயது மதிக்கத்தக்க அந்த நபர், கடந்த பல நாட்களாக சாலையோரங்களில் சுற்றித் திரிந்து வந்ததாக கூறப்படுகிறது. அவருக்கு அந்த பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் வணிகக் கடைக்காரர்கள் அவ்வப்போது உணவு வழங்கி உதவி செய்து வந்துள்ளனர்.இந்த நிலையில், இன்று திடீரென அவர் அருகில் உள்ள பெட்ரோல் பங்கில் வாட்டர் பாட்டிலில் பெட்ரோல் வாங்கி, அதை தனது உடலில் ஊற்றி, தானே தீ வைத்துக் கொண்டதாக கூறப்படுகிறது. இதனை பார்த்த பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர். தீப்பிடித்த நிலையில் அந்த நபர் சாலையோரமாக ஓடிச் சென்றதாகவும், பின்னர் கீழே விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.சம்பவத்தை கண்ட பொதுமக்கள் உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவல் கிடைத்ததும் போலீசார் விரைந்து சம்பவ இடத்திற்கு வந்தனர். பின்னர், உயிரிழந்த நபரின் உடலை மீட்டு, தனியார் ஆம்புலன்ஸ் மூலம் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்க உள்ளனர்.இந்த சம்பவம் குறித்து ஊதியூர் போலீசார் வழக்குப் பதிவு செய்து ஆய்வாளர் சரோஜா விசாரணை மேற்கொண்டு வருகின்றார் உயிரிழந்தவர் யார், எந்த பகுதியைச் சேர்ந்தவர், அவரது பெயர் என்ன என்பது உள்ளிட்ட விவரங்கள் குறித்து விசாரணை தீவிரமாக நடைபெற்று வருகிறது. பகல்நேரத்தில் நடந்த இந்த திடீர் சம்பவத்தால் காஞ்சிபுரம் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு மற்றும் பதற்றம் நிலவியது. போலீசார் நிலைமையை கட்டுப்படுத்தி, பொதுமக்களை அமைதிப்படுத்தினர். சம்பவம் தொடர்பான அனைத்து கோணங்களிலும் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது

# கொடைக்கானலில் கனமழையால் தடுப்பில் பாய்ந்த ஆம்புலன்ஸ் வாகனம்!



கொடைக்கானல், ஜன.4

கொடைக்கானலில் பெய்த கனமழையால் கட்டுப்பாட்டை இழந்த ஆம்புலன்ஸ் வாகனம் தடுப்பு சுவரில் மோதி விபத்திற்குள்ளானது.

தென்றல் ஆம்புலன்ஸ் என்ற வாகனம் கொடைக்கானலில் நோயாளியை இறக்கிவிட்டு பின்னர் வத்தலக்குண்டு பிரதான ரோட்டில் சென்று கொண்டிருந்தது.

திடீரென பல்வேறு பகுதிகளில் பெய்து வந்த கனமழையின் காரணமாக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வலது பக்கவாட்டில் மோதி நின்றது. இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

விபத்தில் அதிர்ஷ்டவசமாக ஆம்புலன்ஸ் டிரைவர் தப்பினார். கொடைக்கானல் போலீசார் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்பு படையினருக்கு தகவல் அளிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்று வாகனத்தை அப்புறப்படுத்தினர். விபத்திற்கான காரணம் குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

### சென்னையில் 4,5 – ஆம் தேதிகளில்

# முதியோருக்கு வீடு தேடி ரேசன் பொருட்கள் விநியோகம்!

சென்னை, ஜன.4–

ஜன. 4, 5இல் முதியோருக்கு வீடு தேடி ரேஷன் பொருள் சென்னையின் 15 மண்டலங்களில்



செயல்படும் 990 நியாய விலைக் கடைகள் மூலம் ஜன. 4, 5 ஆம் தேதிகளில் முதியோர், மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று அத்தியாவசியப் பொருள்கள்வழங்கப்படவுள்ளது.

இதுகுறித்து தமிழக கூட்டுறவுத் துறை சார்பில் நேற்று வெளியிடப் பட்ட செய்திக்குறிப்பு:

முதல்வரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் தமிழகம் முழுவதும் 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர், மாற்றுதிறனாளிகளின் வீடுகளுக்கே சென்று பொதுவிநியோகத் திட்டப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

அதன்படி, 2026 ஜனவரி 4, 5 ஆம் தேதிகளில் சென்னையில் அண்ணா நகர், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர், தேனாம்பேட்டை, அடையாறு, திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார் பேட்டை, ராயபுரம், திரு.வி.க. நகர், அம்பத்தூர், கோடம்பாக்கம், வளசரவாக்கம் ஆகிய 15 மண்டலங்களில் செயல்படும் 990 நியாய விலைக் கடைகளின் விற்பனையாளர்கள் அத்தியாவசிய பொருள்களை வீடு தேடி விநியோகம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

முதல்வரின் தாயுமானவர் திட்டத்தில் பயன்பெறும் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இந்தத் திட்டத்தைத் தவறாமல் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நெல்லை, நெல்லையப்பர் – காந்திமதி அம்பாள் கோவிலில் 2–ம் பிரகாரம் கல் மண்டபம் புதுப்பித்த பின்னர் முடிவுற்ற பணிகளை சபாநாயகர் அப்பாவு, அமைச்சர் சேகர்பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர். அருகில் கலெக்டர் சுகுமார், எம்.எல்.ஏ. அப்துல்கவாப், மேயர் ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மோனிகா ராணா, துணை மேயர் ராஜு, முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன், முன்னாள் எம்.எல்.ஏ. மனோஜ் பாண்டியன் ஆகியோர் உள்ளனர்.



குமரி மாவட்டம், தாணுமாலைய கோவில் மார்கழி பெருந்திருவிழா தேரோட்டத்தை அமைச்சர்கள் மனோ தங்கராஜ், சேகர்பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர். அருகில் கலெக்டர் அழகுமீனா, விஜய்வசந்த் எம்.பி., வாரிய தலைவர் சுரேஷ்ராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### அசாமில் ஆசிய அளவிலான 11வயதுக்கு உட்பட்ட

# பள்ளி மாணவர்களுக்கான சதுரங்க போட்டியில் வெற்றிப்பெற்று திரும்பிய மாணவிக்கு வரவேற்பு!



திருப்பத்தூர் ஜன.4

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் பகுதியைச் சேர்ந்தவர் யாசினி இவர் 11 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவர்களுக்கான 14 ஆவது ஆசிய சதுரங்க சாம்பியன் ஷிப் போட்டி கடந்த டிசம்பர் மாதம் 27 ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை அசாம் மாநிலத்தில் உள்ள குவஹாத்தியில், நடைப்பெற்றதில் பங்கேற்றார்.

இதில் 28 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன் பிரதேசங் களைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்ற நிலையில், திருப்பத்தூர் மாவட்டம். திருப்பத்தூர் அடுத்த தர்மராஜா கோவில் பகுதியை சேர்ந்த பொன்முடி என்பவரின் மகள் யாசினி, பெண்கள் பிரிவில் இப்போட்டியில் பங்கேற்று, சாம்பியன் ஷிப் பட்டம், மற்றும் பதக்கம் வென்றார். அதனை தொடர்ந்து பதகத்துடன் ஊர் திரும்பிய யாசினிக்கு, சென்னை விமான நிலையத்தில், அவரது குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள், பயிற்சியாளர்கள், உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதனைத் தொடர்ந்து இதனை ஏற்பாடு செய்த, வேலவன் மற்றும், பயிற்சியாளர்களுக்கு மாணவியின் உறவினர்கள் நன்றி தெரிவித்தனர்.

# பழுதடைந்த பாலம் சீரமைப்பு!

### சதாசிவம் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!!



மேட்டூர்,ஜன.4

மேட்டூர் அணை கட்டுமான பணி தொடங்குவதற்கு முன்பாக காவிரியை கடந்து கட்டுமான பொருட்களை எடுத்து செல்வதற்காக ஆங்கிலேய அரசு 1928 ஆம் ஆண்டு பணியை முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வந்தனர்.

அதன் பிறகு மேட்டூரில் இருந்து சேலம் செல்லும் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டது. கடந்த 35 ஆண்டுகளுக்கு முன்பு பாலம் வழுவிழந்ததால் கனரக வாகன போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டது. அதன் பிறகு இந்த பாலம் தேசிய நெடுஞ்சாலை துறை கட்டுப்பாட்டில் கொண்டு வந்தாலும் பாலத்தை முறையாக நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் பராமரிக்காததால் பாலம் சிதலமடைந்து போக்குவரத்திற்கு தகுதியற்றதாக மாறி வந்த சூழலில் கடந்த 5ம் தேதி முதல் சுமார் 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்பொழுது 90% பணிகள் நிறைவடைந்துள்ளநிலையில்பாலத்தை மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம் ரிப்பன் வெட்டி போக்குவரத்திற்கு திறந்து வைத்து ஆய்வு நடத்தினார்.

### கேரளாவில் பயங்கரம்:

# ஓடும் ரெயிலில் போலீஸ் அதிகாரிக்கு கத்திக்குத்து!

### பயணி வெறிச்செயல்!!

திருவனந்தபுரம், ஜன. 04–

கேரளத்தில் ஓடும் ரெயிலில் ரெயில்வே காவல் துறை அதிகாரியை பயணி ஒருவர் கத்தியால் குத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக ரெயில்வே காவல் துறையினர் கூறியதாவது:

திருவனந்தபுரம்–மங்களூர் இடையிலான மலபார் எக்ஸ்பிரஸ் ரெயிலில் இரவு இந்த சம்பவம் நிகழ்ந்தது. எஸ்5 பெட்டியில் ஒரு பயணி மற்றவர்களுக்கு தொந்தரவு தரும் வகையில் நடந்து கொள்வதாகப் புகார் வந்தது. இதையடுத்து, ரெயில்வே காவல் துறையின் பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவு அதிகாரியான சனல்குமார் அங்கு சென்று விசாரணை நடத்தினார். அப்போது, பிரச்சினை ஏற்படுத்திய பயணியான பத்தனம்திட்டா மாவட்டத்தைச் சேர்ந்த அனில் குமார் (56) என்பவர் காவல் அதிகாரியுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அப்போது திடீரென தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து காவல் அதிகாரியை அனில் குமார் தாக்க முயன்றார். தாக்குதலில் இருந்து தப்பிக்க முயற்சித்தபோதும் கத்தி அவரது அடிவயிற்றில் பாய்ந்தது. இதையடுத்து, அவர் ரத்த வெள்ளத்தில் கீழே விழுந்தார்.

இந்த சம்பவத்தால் பிற பயணிகள் பெரும் அதிர்ச்சியடைந்து கூச்சலிட்டனர். சிலர் அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுந்து ரெயிலை நிறுத்தினர். மேலும், பல காவலர்கள் அங்கு வந்து கத்தியால் குத்திய அனில் குமாரை சுற்றி வளைத்துப் பிடித்து கைது செய்தனர்.

காயமடைந்த காவல் அதிகாரியை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். கைது செய்யப்பட்ட அனில் குமார் கோட்டயம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டார் எனத் தெரிவித்தனர்.



தேனி மாவட்டத்தில், ஜல்லிக்கட்டு காளைகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதை படத்தில் காணலாம்.

# கந்திலி அருகே செவிலியர் கழுத்தில் அணிந்திருந்த 2 சவரன் தங்க செயினை பறித்து சென்ற மர்ம நபர்கள்!

திருப்பத்தூர் ஜன.4

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி அடுத்த நார்சம்பட்டி தொன்னையன் வட்டம் பகுதியைச் சேர்ந்த பிரகாஷ் மனைவி வாசுகி(40) என்பவர் திருப்பத்தூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் செவிலியராக ஐந்து ஆண்டுகளாக பணி புரிந்து வருகிறார்.

இன்று வழக்கம் போல் பணியை முடித்துவிட்டு இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பும் போது பெரியகரம் மேல் சுண்ணாம்பு காளை அருகே வாசுகி சென்றுள்ளார்.

அப்போது யாரும் இல்லாத நேரம் பார்த்து இரண்டு மர்ம நபர்கள் தலைக்கவசம் அணிந்து மர்ம நபர்கள் வாசுகி அணிந்திருந்த இரண்டு சவரன் தங்க செயினை கண் இமைக்கும் நேரத்தில் பறித்துச் சென்று இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்றுள்ளனர்.

இதனால் பதறிப் போன வாசுகி உடனடியாக கணவன் பிரகாசுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

பின்னர் வாசுகி இச்சம்பவம் குறித்து கந்திலி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். புகாரை பெற்றுக் கொண்ட போலீசார் செயின் பறிப்பில் ஈடுபட்ட



மர்ம நபர் குறித்து வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பணி முடிந்து செவிலியர் வீடு திரும்பும் போது இரு சக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள்தங்க செயினைபறித்து சென்றதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரராகிய திருநெல்வேலி மாவட்டம் கதவு எண் 5/48 சுனாமி காலனி தோமையார்புரம் விஜயாபதி 627104 என்ற முகவரியில் வசிக்கும் அருள்தாசன் என்பவரின் முறையான தகவலின் பேரில் தெரிவிப்பது யாதெனில்

எனது கட்சிக்காரர் ராதாபுரம் சார்பதிவகத்தில் 5822/2025 பதிவு செய்யப்பட்ட செட்டில்மென்ட் பத்திரம் சர்வே எண் 208/53க்கான சுமார் 2.74 சென்ட் சொத்தை அனுபவித்து வருகின்றார். மேற்படி சொத்தை ஈடுகெட்டி எனது கட்சிக்காரர் Veritas Finance Ltd ல் கடன் கோரும் போது சொத்து சம்மந்தமான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது. அப்போது தன் சொத்திற்கு சம்மந்தமான மூல ஆவணம் இலவச வீட்டுமனை பட்டா ( 19913/2004)எனது கட்சிக்காரர் Xerox எடுப்பதற்காக கடந்த 15/12/2025 அன்று பேருந்தில் சென்ற போது அவரிடமிருந்து சொத்திற்கு சம்மந்தமான மேற்படி மூல ஆவணம் தொலைந்தது தெரியவந்தது. ஆகவே மேற்படி காணாமல் போன அசல் மூலஆவணத்தை எடுத்து தன் வசம் வைத்திருப்பவரோ அல்லது சொத்தின் பெயரில் யானுமே உரிமையோ, ஆட்சபனையோ பின் தொடர்சியோ இருந்தாலோ நாளைமுதல்15நாட்களுக்குள்எழுத்துமூலமாகதக்கஆதாரத்துடன் கீழ் கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும். அதன்பின் வரும் எந்தவிதமான ஆட்சியேபனையும் எனது கட்சிக்காரரை எந்த வில்லங்கத்திற்கும் கட்டுபடுத்தாது என்பதனை இந்த பொது அறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**M. MARIA SINGAM .**

M. A. LLB , ADVOCATE/NOTARY PUBLIC
GO. Ms. No. 202/17, 2.No. 328/84
24,LAW CHAMBER, NAGERCOIL1



சேலம் மாவட்டம் கெங்கவல்லியில் ரூ.4 கோடியில் மேம்பாலம் கட்டுவதற்கான பூமிபூஜை எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. தலைமையில் நடந்தது.

# ஓசி பீடி தகராறில் வடமாநில தொழிலாளர்கள் 3 பேருக்கு பீர்பாட்டில் குத்து!

### தர்மபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை!!

நல்லம்பள்ளி,ஜன.4

தர்மபுரி மாவட்டம் ஒட்டப்பட்டி தடங்கம் அருகே இந்திரா நகர் பகுதியில் செயல்பட்டு வருகிறது தனியார் நூல் மில். இந்த நூல் மில்லில் சுமார் 100க்கும் மேற்பட்ட வட மாநில தொழிலாளர்கள், நூல்மில் எதிரே விடுதியில் தங்கி பகல்இரவு சிப்ட் முறையில் வேலை செய்து வருகிறார்கள். இந்த நிலையில் நேற்று இரவு நூல்மில்லில் பணி முடித்து கொண்டு, விடுதியில் ஓய்வில் இருந்த ஒடிசா மாநிலத்தை சேர்ந்த கோவிந்நாயக் 28 என்பவர், சக வட மாநில தொழிலாளரிடம் பீடி கேட்டதாக கூறப்படுகிறது.

இதற்கு பீடி இல்லை என சம்மந்தப்பட்ட சக வட மாநில தொழிலாளர் கூறியுள்ளார். அப்போது இரு தொழிலாளர்களுக்கு இடையே வாக்குவாதம் நிலவி உள்ளது. இதனை அறிந்த மற்ற வட மாநில தொழிலாளர்கள் 2 பேர் கோவிந்நாயக்கை சமரசம் செய்ய முயன்றுள்ளனர்.

அப்போது ஆத்திரமடைந்த கோவிந்நாயக், சமரசம் செய்து வந்த ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த அங்குராஜ் மண்டில் 30, பீகாரைச் சேர்ந்த நிஷாத்குமார் வயது 18 ஆகிய இரண்டு பேரையும், பீர் பாட்டிலை உடைத்து தாக்கியுள்ளார். அப்போது மூன்று பேருக்கும் இடையே மாறி மாறி பீர் பாட்டிலால் ஒருவரை ஒருவர் குத்திக் கொண்டு சண்டையிட்டனர்.

இதனால் நூல் மில் தொழிலாளர் தங்கும் விடுதியில் திடீர் பரபரப்பும், பதற்றமும் நிலவியது. தகவல் அறிந்த அதியமான் கோட்டை போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று காயமடைந்த மூன்று வட மாநில தொழிலாளர்களையும், மீட்டு சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தனர்.

அவர்கள் மூன்று பேரும் தர்மபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.